


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் ஓசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 250 கோடி ரூபாய் முதலீட்டில் 1,100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 3 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைச் செயலாளர் வி.அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, தொழில் வணிக ஆணையர் நிர்மல் ராஜ். சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில்ராஜ், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் ஓசூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில், 23,303.15 கோடி ரூபாய் முதலீட்டில், 44,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 53 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 1003.85 கோடி ரூபாய் முதலீட்டில் 4,483 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில், 39 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆக மொத்தம், ரூ. 24,307 கோடி முதலீட்டில் 49,353 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 92 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

# பொருளாதாரத்தில் தமிழ்நாடு முதலிடம் !

## ஓசூரில் நடைபெற்ற - 'தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில்' - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் !

ஓசூர், செப். 13 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2025) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற "தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2025 ஓசூர்"இல் (TN INVESTMENT CONCLAVE 2025 HOSUR) உரையாற்றுகையில், "பொருளாதாரத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

**தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**



ஜெர்மனி மற்றும் இலண்டன் ஆகிய ஐரோப்பியப் பயணத்தை முடித்துவிட்டு 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீட்டுடன் தமிழ்நாட்டிற்குத் திரும்பிய மூன்று நாளில், இந்த முதலீட்டாளர் மாநாடு மூலமாக உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்!

### நமது சாதனையை நாமே வெல்கிறோம்!

அதாவது நான் சென்றுவந்த பயணத்தில், 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடு என்றால், இன்றைக்கு இங்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் கையெழுத்தாகியிருக்கிறது! நம்முடைய ரெக்கார்டை நாம்தான் பீட் செய்கிறோம்!

அதுமட்டுமல்ல, 8 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய 1210 கோடி ரூபாய் முதலீட்டில், 4 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

### தமிழ்நாட்டின் தொழில் வரைபடத்தில் தனித்த அடையாளம் பெற்ற நகரம்!

ஓசூர் - திறமையும், புதுமையும் சந்திக்கும் நகரமாக இருக்கிறது! தமிழ்நாட்டின் தொழில் வரைபடத்தில் தனித்த அடையாளம் பெற்ற நகரம் ஓசூர்! வளர்ச்சியின் முகம்!

இந்தியாவைக் கடந்து, உலக அளவில் கவனத்தை ஈர்க்கும் நகரமாக ஓசூர் ஒளி வீசுகிறது. அப்படிப்பட்ட ஓசூரில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க வேண்டும் என்று நாங்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்த மாநாட்டிற்கு வருகை தந்திருக்கும் முதலீட்டாளர்கள் எல்லோரையும் தொழில் துறை அமைச்சர் வரவேற்றிருந்தாலும் நானும் உங்களை அன்புடன் வருக... வருக... என்று வரவேற்கிறேன்.

தமிழ்நாடு தொழில்துறையில் இவ்வளவு வேகமாக செயல்படுகிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் துடிப்பான - இளமையான அமைச்சராக இருக்கக்கூடிய தொழில் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்கள்.

சென்ற மாதம், தூத்துக்குடியில் 'வின்ஃபாஸ்ட்' நிறுவனத்தைத் தொடங்கி வைத்து, முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டேன். இன்றைக்கு, ஓசூரில் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு, மாலை, டெல்டா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் நியூ டெல்டா ஸ்மார்ட் மேனுஃபேக்ட்சரிங் லைனைத் திறந்து வைத்து அங்கு உரையாற்ற இருக்கிறேன்.

### இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி!

அடுத்தடுத்த மாதங்களுக்கும் Target கொடுத்திருக்கிறேன். அமைச்சர் மற்றும் தொழில்துறை அதிகாரிகளின் வேகம் மட்டுமல்ல; முதலீட்டாளர்களான உங்களின் ஆர்வமும்தான் என்னை இங்கு வர வைத்திருக்கிறது.

ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடனே - நாங்கள் set செய்த Goal; "2030க்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி"! மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டும் என்றால், அதற்கு தொழில் வளர்ச்சிதான் அடிப்படை! அதனால்தான் அதற்கான கட்டமைப்புகளை மிகவும் சிறப்பான வகையில் உருவாக்கி அவற்றை மேலும், மேலும் மேம்படுத்தி அதன்மூலமாக தொழில் செய்யும் சூழலை வலுப்படுத்துகிறோம்! அதனால்தான், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில் 11.19 விழுக்காடை தொட்டிருக்கிறது.

### புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயல்பாட்டுக்கு வரவேண்டும் என்பதில் கறார் – கண்டிப்பு!

இந்த வளர்ச்சியை இன்னும் அதிகரிக்கத்தான், முதலீட்டாளர்கள் மாநாடுகளையும், முதலீட்டாளர் களுடனான சந்திப்புகளையும் நாம் தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம்.

திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் தமிழ்நாட்டைப் பற்றித் தெரிந்துகொண்டு, முதலீட்டாளர்கள் ஆர்வமாக வருகிறார்கள். ஒவ்வொரு முறையும் தொழில் துறைக்கான அமைச்சரையும் - அதிகாரிகளையும் சந்திக்கும்போது, நான் சொல்வது ஒன்றுதான்;



**தமிழ்நாடு தொழில்துறையில் இவ்வளவு வேகமாக செயல்படுகிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் துடிப்பான - இளமையான அமைச்சராக இருக்கக் கூடிய தொழில் துறை அமைச்சர் தம்பி டி.ஆர்.பி.ராஜா அவர்கள்.**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# 'தமிழ்நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன்!'

## பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் தமிழ்நாடெங்கும் உறுதிமொழியேற்போம்! முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

சென்னை, செப்.13-

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் விடுத்த வலைதளப் பதிவில், "பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில், 'தமிழ்நாட்டைத் தலைகுனிய விட மாட்டேன்" எனும் உறுதிமொழியினை முன்மொழிவோம்!" எனச் சூளுரைத்துள்ளார்.**

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க நமது 'ஓரணியில் தமிழ்நாடு' இயக்கத்தில் ஒரு கோடிக்கும் மேலான குடும்பங்கள் இணைந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில் (செப்.15) தமிழ்நாடெங்கும் 68,000+ பூத் வாரியாக முன்மொழியவுள்ள உறுதிமொழி:

**"தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்!"**

★ "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தில் இணைந்துள்ள 1 கோடி + குடும்பத்தினரும் சேர்ந்து, 'தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்!' என உறுதி ஏற்கிறோம்!

★ நான், "தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி ஏற்கிறேன்.

★ நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் 'SIR'க்கு எதிராக நிற்பேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி ஏற்கிறேன்.

★ நான், "நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய கல்வி நிதிக்காகப் போராடுவேன்; ஒருபோதும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி ஏற்கிறேன்.

★ நான், "தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு (நன்மதிப்பிற்கு) எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி ஏற்கிறேன்.

★ நான், "பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள்" என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களையும் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்" என உறுதி ஏற்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதி நஞ்சநாடு ஊராட்சிக்குட்பட்ட மேல்கவ்ஹட்டி சமுதாய கூடத்தில் நேற்று நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை, அரசு தலைமைக் கொறாடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம். ராஜுவுடன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி இயக்குனர் சிவசங்கர் (ஊராட்சிகள்), வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதர், சிவகுமார், அரசு துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட அவைத் தலைவர் போஜன், உதகை தெற்கு ஒன்றியம் (மேற்கு) செயலாளர் ஜெகதீஷ், குன்னூர் ஒன்றியச் செயலாளர் பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கண்டிதம்பட்டு ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராமச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் தோ.அருளானந்தசாமி, அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை தலைமை நிர்வாகி ராமன், ஊரக வளர்ச்சி முகமை உதவி திட்ட அலுவலர் (கட்டமைப்பு) த.செந்தில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.